மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ



விலை 16 காசு

25-9-60

மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 · 25—9—60 ஒலி 47

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுங்கள் !

★

சிங்களத் தீவிலிருந்த குழப்பநிலைமாறி, நிலையான தோர் ஆட்சி அமைக்கப்பட்டு விட்டதைக் கண்டு நாமெல்லாம் மகிழ்ந்துக் கிடந்தோம் !

நாளுக்கொரு ஆட்சி, வேளைக்கு ஒரு மந்திரி என்ற சீர்கெட்ட நிலை மாறிவிட்டது, இனி அந்த நாட்டிற்கும் அந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் நல்வாழ்வு கிடைக்கும் என்று மனதார நம்பியும் கிடந்தோம் !

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பதவி ஏற்றவுடன் கொத்தலவாலா காலமுதல் கடைசியாக கவிழ்ந்து போன தகநாயகா காலம்வரை நீடித்துவந்த கொடுமைகள் அனைத்தும் ஒழிந்து தமிழர்கள் நல்வாழ்வு பெறுவார்கள் என்றுதான் நாங்களும் நம்பினோம், அந்த நாட்டுத் தமிழர்களும் நம்பினார்கள்!

பதவி ஏற்ற நேரத்தில் திருமதி பண்டாரநாயகா தந்த வாக்குறுதி மேலும் பல நல்ல நம்பிக்கைகளைத் தந்தது ! திருமதி பண்டாரநாயகாவின் பேச்சைக் கேட்டு இலங்கை வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்களெல்லாம் இனபப் பெருங்கடலில மூழ்கி மூழ்கித் திளைத்துக் கிடந்தார்கள் !

திருமதி பண்டாரநாயகா — "தமிழர் பிரச்சினையில் விரைவாகவே ஒரு முடிவைக் காண்பேன்" என்று பதவி ஏற்ற நேரத்தில உறுதியளித்தார் ! அப்போது அவருடைய பேச்சில் இத்தனை உட்பொருள், இத்தனை மறைபொருள், இத்தனை வஞ்சகம் பொதிந்து கிடக்குமென்று யாருமே நினைக்கவில்லை ! அவரது பேச்சின் உண்மையான பொருளை இன்றுதான் அறிய முடிந்தது !

திருமதி பண்டாரநாயகா கூறியதுபோலவே, தமிழர் பிரச்சினைக்கு முடிவு கட்ட விரைவாகவே கிளம்பிவிட்டார் !

இலங்கைத் தீவில் வாழும் அன்னியர்கள், இலங்கைத் தீவில் வாழும் அயல்நாட்டார்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 400 வீதம் வரி செலுத்த வேண்டுமென்றும், வெளிநாட்டினரால் நடத்தப்படும் தொழில் ஸ்தாபனங்கள், சிறியது, பெரியது என்ற பேதமின்றி ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வரி செலுத்த வேண்டுமென்றும், திருமதி பண்டாரநாயகா தனது நிதி அமைச்சர் மூலம் உத்தரவிட்டிருக்கிறார் !

இதுவரையில் பதவிப் பொறுப்பிலிருந்த எல்லோரையும் விட இவர் மிக்க சாதுர்யமான முறையைக் கையாண்டு தமிழர்களைத் துரத்தியடிக்க திட்டமிட்டிருக்கிறார் ! என்ன இருந்தாலும் பெண் மந்திரியல்லவா ? இயற்கையாக அமைந்துள்ள சாதுர்யம் எங்கே போய் விடும் !

சொந்த நாட்டில் பிழைக்க வழியின்றி, சொந்தநாட்டில் வாழ வழியின்றி இலங்கைத் தீவிலே குடியேறி, ரப்பர் தோட்டங்களிலே, தேயிலைத் தோட்டங்களிலே கூலி வேலை செய்து சோற்றுச் சீவனத்திற்கே தாளம் போடும் ஏழைத் தொழிலாளிகள் இந்தத் தலைவரித் தொகையை எப்படிக் கட்ட முடியும் என்பதை திருமதி பண்டாரநாயகா யோசித்துப் பார்த்திருக்க மாட்டார் ! அவர் இதைப்பற்றி ஏன் யோசிக்க வேண்டும் ! 'பசி என்றால் எப்படி இருக்கும், பசிக்கு உருவம் உண்டா, இல்லையா ?" என்று கேட்கும் சீமான் பரம்பரையைச் சார்ந்தவருக்கு இதைப்பற்றி அக்கறை பிறக்க என்ன நியாயமிருக்கிறது !

"ஏழைத் தொழிலாளிகள் இந்த வரித் தொகையைத் தாங்குவார்களா" என்ற கவலையும் அவருக்கு இருக்க நியாயமில்லை !

"திருமதி பண்டாரநாயகா ஏழைகளிடமிருந்து இந்த வரித் தொகையை வசூலித்து, இலங்கைத் தீவின் செல்வத்தைப் பெருக்க இலங்கைத் தீவின் சிறப்பை உயர்த்தி இலங்கை மக்களுக்கு நல் வாழ்வளிக்க வேண்டும்" என்ற எண்ணத்தோடு இந்த வரி விதிக்கப்பட்டிருந்தால் ஏழைகளைப்பற்றி கொஞ்சமாவது கவலைப்பட்டிருப்பார் ! ஏழைத் தொழிலாளிகள் தாங்குமளவுக்காவது இந்த வரியை விதித்திருப்பார் !

திருமதி பண்டார நாயகாவின் எண்ணம், திருமதி பண்டாரநாயகாவின் நோக்கம் வரியை வசூலித்து சர்க்கார் கஜானாவை நிரப்ப வேண்டுமென்பதல்ல ! "ஏழைத் தொழிலாளிகள் மீது தாங்க முடியாத வரியைப் போட வேண்டும் ! அந்த வரியைக் கட்ட முடியாமல் தவித்து வெளியேற வேண்டும்" என்பதுதான் திருமதி பண்டாரநாயகாவின் நோக்கமாகும் ! இந்த ராஜ தந்திரத்தை பலர் அறிந்திருக்கமாட்டார்கள் என்றே எண்ணுகிறோம் !

துப்பாக்கியைக் காட்டி வெளியேற்றுவதைவிட, பயமுறுத்தி வெளியேற்றுவதைவிட, சட்டம் போட்டு வெளியேற்றுவதைவிட—மிரட்டல், உருட்டல் செய்யாது பொருளாதார நெருக்கடியை உண்டாக்கி அவர்களின் வாழ்க்கையை சீர்குலைத்து விட்டால தன்னாலே காரியம் கைகூடி விடும் என்று திருமதி பண்டாரநாயகா எண்ணி இந்த பெரும் தொகையை வரியாக விதித்திருக்கிறார் !

திருமதி பண்டாரநாயகாவின் ராஜ தந்திரத்தை, நுண்ணறிவை மிகக பாராட்டுகிறோம் ! எவரிடமும் இல்லாத சாதுர்யம் உங்களிடமிருக்கிறது ! அதற்காக தங்களின் ஆற்றலை, திறமையை வெகுவாக மெச்சுகிறோம் ! ஆனால் சாதுர்யத்தோடு கொஞ்சம் மனிதப் பண்பும் வேண்டும் என்பதை திருமதி பண்டாரா அறியாதவர் அல்ல !

காடுகளாய், மேடுகளாய் கிடந்த நாட்டை, நாடுகளாய், நகரங்களாய், கண்கவர் மாளிகைகளாய் உருவாக்கித் தந்தவன் தமிழன் ! அந்தத் தமிழன் செய்த நன்றியை மறவாதீர்கள், அவனுக்குத் துரோகம் செய்யாதீர்கள் என்பதுதான் எங்களது தாழ்மையான வேண்டுகோளாகும் !

இலங்கையில் வாழும் தமிழர்கள் நாடற்றவர்கள் அல்ல—ஆனால் நாடோடிகள் !

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சொந்த நாடு உண்டு ! அந்த நாடு தங்கம் விளையும் நாடுதான், முத்து கொழிக்கும் நாடுதான், அதிலும் தேக்கு உள்ள நாடுதான் ! இங்கே நஞ்சையுண்டு, புஞ்சையுண்டு, ஆறுகள் உண்டு, குளங்கள் உண்டு, வளைந்து வளைந்து செல்லும் வாய்க்கால்களும் உண்டு ! இங்கே வளமுண்டு வனப்புண்டு, எழில் உண்டு ! ஆம், எல்லாம் உண்டு ! சுதந்திரத்தைத் தவிர இங்கே எல்லாம் உண்டு! எல்லாமுள்ள நாட்டிலிருந்து, ஏழையாய், வாழ முடியாதவனாய் அங்கே வந்திருக்கிறான் ! சோறு தேடி வந்திருக்கிறான் ! உயிர் வாழ வந்திருக்கிறான் !

தமிழன் யார் யாருக்கோ அள்ளிக் கொடுத்திருக்கிறான், தமிழன் யார் யாரையோ ஆதரித்திருக்கிறான ! இன்று நிலைகெட்டு விட்டான், உங்கள் ஆதரவையும் நாடி வந்திருக்கிறான் ! அவனைக் காப்பாற்றுங்கள, அவனுக்கு வாழ்வளியுங்கள் !

எங்கள் நாடு விடுதலை பெறுகிறவரையில், எங்கள் திருவிடம் தன்னாட்சிப் பெறுகிறவரையில் தமிழனைக் காப்பாற்றுங்கள் ! நாடு விடுதலைப் பெற்று விட்டால் எங்கள் கண்மணிகளை நாங்கள் திரும்ப அழைத்துக் கொள்ளுகிறோம் !

அடிமை நாடு கெஞ்சுகிறது ! தமிழனைக் காப்பாற்றுவீர்களா ?

★

சென்னையில் திராவிடநாடு விடுதலை வார விழா !

★

50000 மக்களைக் கொண்ட மாபெரும் ஊர்வலம் !

நகரம் என்றுமே கண்டிராத கண்கொள்ளாக் காட்சி !

மாவட்டச் செயலாளர் மணிவண்ணன் தலைமையில் மகத்தான அணிவகுப்பு !

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரின் வேண்டுகோளுக் கிணங்க சென்னை மாவட்ட தி.மு. கழகம் சென்ற 18-9-60ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 11ம் ஆண்டு நிறைவு விழாவையும், திராவிடநாடு விடுதலை வார விழாவையும் மிகச் சீரும் சிறப்புடனும், குதூகலமாகவும் சென்னை நகரில் எந்த அரசியல் கட்சியும் கொண்டாடாத வகையிலும் கொண்டாடியது. சென்னை நகரம் இதுவரை இந்த மாதிரி ஊர்வலத்தைப் பார்த்ததில்லை என்று மக்கள் பேசுகின்றனர்.

இந்த விழாவை தென்னகத்தில் மட்டுமின்றி, தென்னக மக்கள் வசிக்கின்ற எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாபெரும் ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்த ஏற்பாடு செய்திருந்தது.

18—9—60 தேதி காலையிலிருந்தே சென்னை நகரம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது!

நகரமெங்கும் தோரணங்களும், வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. பல பகுதிகளில் கொடிகள் ஏற்றப்பட்டு சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

பிற்பகல் இரண்டு மணியிலிருந்தே கழகத் தோழர்கள் பல வகையான அறிவுரைகளடங்கிய தட்டிகளையும், கொடிகளையும் தாங்கி வந்த வண்ணமிருந்தனர்! ஏராளமான சைக்கிள்களில் கழகத்தின் இரு வண்ணக் கொடிகளைக் கட்டிக்கொண்டு இராயபுரத்திலுள்ள அறிவகத்திற்கு வந்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு அறிவகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் 50000க்கு மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டனர்,

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினருமான தோழர் தி. மணிவண்ணன் ஊர்வலத்தின் முன் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து கழகக் கொடியினை தாங்கி ஊர்வலத்தை நடத்திச் சென்றார்.

இந்த ஊர்வலத்தில் நகர மன்ற உறுப்பினர்களும், கழகப் பிரமுகர்களும் தங்கள் கரங்களில் கொடிகளைத் தாங்கிக் கொண்டு வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மற்றும் 12 தோழர்கள் குதிரைகளில் அமர்ந்து வந்த காட்சியைக் கண்டபோது படை வீரர்களைப் போன்றும், பண்டைய வேந்தர்களைப் போன்றும் காட்சியளித்தது!

மற்றும் சேரன் செங்குட்டுவன். வடநாட்டு மன்னர்களான கனக விசயர்களின் தலைமீது கல் ஏற்றி வருவது போன்ற காட்சியும், நம்முடைய தியாகச் செம்மல்களான தாளமுத்து, நடராசன், உடையார்பாளையம் வேலாயுதம், வண்ணை பாண்டியன் போன்றவர்களைகாங்கிரஸ் வெறியர்கள் தாக்கிக் கொன்றதை உருவகப்படுத்தும்படியான வகையிலும் மற்றும் கொள்கைகளை விளக்கும்படியான பல காட்சிகள் ஊர்வலத்தின் முன்னே சென்ற காட்சி ஊர்வலத்தை மேலும் சிறப்பித்ததோடு, மக்களுடைய சிந்தனையைத் தூண்டி கருத்துத் தெளிவு பெரும் வகையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தகுந்தது.

அடுத்து, அண்ணா அவர்களின் அழகிய உருவப் படம் (10அடி உயரம் 8 அடி அகலமுள்ளது) வைத்து அலங்கரிக்கப் பட்ட வண்டி சென்றது.

மற்றும், அண்ணா உருவச் சிலை வைத்து அலங்கரிக்கப்பட்ட வண்டியும், 'திராவிடநாடு படம் (பெரிய அளவில்) வைக்கப் பட்டிருந்த வண்டியும் அடுத்தடுத்துச் சென்றன.

மற்றும், கரக ஆட்டம், மயில் ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் சிலம்ப ஆட்டம், கத்திச் சண்டை, புலிவேட ஆட்டம் முதலியவையும் ஊர்வலத்தில் கண்கொள்ளாக் காட்சியாகஇருந்தன.

ஊர்வலத்தில், பாண்டு,மேளம் தாரை, தப்பட்டை, சங்கு, முரசு முதலிய வாத்தியங்கள் முழங்க, 'திராவிட நாடு திராவிடருக்கே, 'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க, 'வடநாட்டு ஆதிக்கம் ஒழிக' 'அண்ணா வாழ்க, என்ற இலட்சிய முழக்கங்களை முழங்கிக்கொண்டு ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட தோழர்கள், கையில் கொடியுடன் அணிவகுத்துச் சென்றனர். ஆயிரக்கணக்கான சைக்கிள்களும் ஊர்வலத்தில் பங்கு கொண்டன.

இந்த ஊர்வலம்சுமார் 1½மைல் நீளமிருந்தது. ஒவ்வொரு சாலையையும் ஊர்வலம் கடந்த போது வண்டிப் போக்குவரத்து சுமார் அரை மணிநேரம் தடைப்பட்டது.

சென்னையின் வடகோடியில் உள்ள 'அறிவகத்திலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம், நகரின் முக்கிய வீதிகளைச் சுற்றிக் கொண்டு தென்கோடியிலுள்ள மயிலை ஓஷியானிக் அருகிலுள்ள திடல்வரை (சுமார் 14 மைல்) வந்துசேர, இரவு 9 30 மணி ஆயிற்று.

ஊர்வலம் சென்ற வழியெல்லாம், வரவேற்புப் பந்தல்களும் கொடிகளும் கட்டப்பட்டு அணி செய்து கொண்டிருந்தன.

வழிநெடுகிலும் சாலையின் இருமருங்கிலும், ஆடவரும் பெண்டிருமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நின்று கொண்டு, ஊர்வலம் வரும்திசை நோக்கி விழிகளை வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் காத்துக்கொண்டிருந்த காட்சியை வர்ணிக்க இயலாது.

அன்று காலையிலிருந்து பகல் 1மணிவரை இடைவிடாது மழை பெய்து கொண்டேயிருந்ததைக் கண்டு, ஊர்வலம் நடக்குமோ நடக்காதோ என்ற ஐயம் அனைவர் உள்ளத்திலும் தோன்றி விட்டது. அதன்பிறகு, வானம் வெளிரிட்டது; சிறுதூற்றல்கூட இல்லாமல் இறுதிவரை இயற்கையும் ஒத்துழைத்தது குறிப்பிடத் தக்கது.

ஊர்வலம், மயிலை-ஓஷியானிக் அருகிலுள்ள திடலை வந்தடையும் போது, அங்கு ஏற்கனவே பொதுக்கூட்டம் தொடங்கி நடந்து கொண்டிருந்தது. அங்கேஏற்கனவே கூடியிருந்த 1லட்சம் மக்களுடன் ஊர்வலத்தினரும் சேர்ந்து பெரியதொரு மக்கள் கடலை உருவாக்கி விட்டனர்.

பட்டப் பகலெனெ, மின்னொளி விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருந்த அந்தப் பரந்த வெளியில், உச்சியில் ஒளி விளக்குகளால்

(12ம் பக்கம் பார்க்க)



19

"பரவாயில்லை டாக்டர்! இப்போது உடம்பு கொஞ்சம்தேவலாம், உள் காயங்களெல்லாம் ஆறி விட்டன!"

"ஆமாம். உங்களுக்கு ஏன் இந்த கதி ஏற்பட்டது? யார் இப்படி உங்களைப் படுகாயப் படுத்தியது" டாக்டர், உதயசூரியனிடம் கதை கேட்க ஆரம்பித்தார்!

"எல்லாம் நான் சார்ந்திருக்கும் அரசியல்தான் காரணம்? இது யார் செய்த வேலை என்பது தெரியவில்லை டாக்டர்!" உதய சூரியனும் டாக்டரிடம் கதைச் சொல்ல ஆரம்பித்தான்.

"அரசியலுக்கும், இதற்கும் என்ன சம்பந்தம்?" டாக்டர் விளக்கம் கேட்கத் தொடங்கினார்!

"வெளிநாடுகளில் அரசியலுக்கும் இதற்கும் துளியும் சம்பந்தமில்லை! இங்கே இதற்கும் அரசியலுக்கும் மட்டுமே தான் நெருங்கிய தொடர்பாகும்!" உதயசூரியன், டாக்டர் ராஜனுக்கு அரசியல் அரிச்சுவடியை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்!

"நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்! டாக்டர்ராஜனுக்குட புரியவில்லை எனவே மேலும் விளக்கம் கேட்கிறார்!

உதயசூரியனும் அலுத்துக் கொள்ளவில்லை! படுத்திருந்தவன் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார ஆரபித்தான்!" கொஞ்சம் "டீ" சாப்பிட வேண்டும் டாக்டர்—டீ சாப்பிட்டால்தான் கொஞ்சம் தெம்போடு பதில் சொலல முடியும் என்ற உதய சூரியன் கூறிவிட்டு இன்னும் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தான்!

அதிருக்கட்டும் உதயசூரியன்! சும்மா, 'டீ, டீ' என்று சாபபிடுறீங்களே! அது அத்தனையும் உடம்புக்குக் கெடுதலாச்சே!" டாக்டர் கொஞ்சநேரம் குருவாக இருகக ஆசைப்பட்டார் போலும்!

"என்ன செய்வது டாக்டர்? பொதுவாக எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் டீயும், சிகரெட்டும்தான் ஆபத்பாந்தவர்கள், ஆருயிர் நண்பர்கள்!" உதய சூரியன் சுருக்கமாக அரசியல்வாதிகளின் சரித்திரத்தையே கூறிவிட்டான்!

"நோ, நோ! இது ரொம்ப கெடுதல்! பின்னால் தான் இதெல்லாம் உங்களுக்குத் தெரியும்!" டாக்டர் மருத்துவக் கல்லூரியில் படித்த பாடத்தை ஒப்புவிக்க ஆரம்பித்தார்!

"உண்மைதான் டாக்டர்! ஆனால், டீயும், சிகரெட்டும்தான் எங்களுக்கெல்லாம் கவலையைத் தீர்க்கும் மருந்தாகும்!" உதய சூரியன் தன் வாழ்க்கை அனுபவங்களை அப்படியே கூறி விட்டான்!

"நீங்கள் சொல்லுவதும் ஓரளவு உண்மைதான்! நான் சிகரெட் பிடிக்க ஆரம்பித்ததே இதற்காகத்தான்!"

"உங்களுக்கென்ன டாக்டர் அப்படிக் கவலை? நாங்கள் தான் அரசியல்வாதிகள்! எங்களுக்கு கவலைதான் உடன் பிறந்த சொதது! உங்களுக்கென் கவலை!' மெல்ல டாகடரிடம் கொஞசம் நோட்டம் விடுப் பார்த்தான்!

"மனிதன் என்றால் எல்லோருக்கும் கவலை இருக்கத்தான் செய்யும்!" கவலை இல்லாத மனிதர்களே கிடையாது!" டாக்டர் உலகத்தைப் பற்றியும் கொஞ்சமும் தெரிந்து வைத்திருக்கிறார் போலும்!

"உண்மைதான் டாக்டர்! ஆனால் உங்களுக்குள்ள கவலைகளுக்கும், எங்களுக்குள்ள கவலைகளுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு!" உதய சூரியன் கொஞ்சம் அரசியலையும் புகுத்திப் பார்க்கிறான் போலும்!

"அப்படியா! கவலையில் கூடவா வித்தியாசமிருக்கிறது! ஒருவன் கூழுக்கு உப்பில்லை என்று கவலைப்படுவான்—ஒருவன் பாலுக்கு சர்க்கரை இல்லை என்று கவலைப்படுவான்! ஒருவன் குந்தக் குச்சு இல்லை என்று கவலைப்படுவான்—ஒருவன் அழகிய பங்களா இல்லையே என்று கவலைப்படுவான்! ஒருவன் கட்டை வண்டியில்லையே என்று கவலைப்படுவான், ஒருவன் கார் இல்லையே என்று கவலைப்படுவான்! ஒருவன் காதல் கைகூடவில்லையே என்று கவலைப்படுவான்—ஒருவன் காம சேஷ்டைகளுக்கு ஏதும் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவான்! இந்த எல்லா கவலைகளும் ஒரே கவலையாகி விடமுடியுமா?" உதயசூரியன் ஒரு நீண்ட பிரசங்கத்தையே செய்துவிட்டான்!

"நீங்கள் சொல்லுவது என்னமோ உண்மைதான்!" டாக்டர் கொஞ்சம் கொஞ்சமாக வழிக்கு வருகிறார் போலும்!

"டாக்டர் சார்! நான் எதையோ சொல்ல ஆரம்பித்து, எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறேன்! அரசியலுக்கும் என் விபத்துக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டீர்களே!' உதயசூரியன் அரசியல்வாதியல்லவா! டாக்டரையும் அரசியல்வாதியாக மாற்றி விடுவான் போலும்!

"ஆமாம், ஆமாம்! சொல்லுங்கள்!" டாக்டரும் பேச்சு என்றால் பின்வாங்க மாட்டார் போலும்!

"மேல்நாடுகளில் கருத்து வேற்றுமைகளுக்கு இடம் தரப்படுகிறது. காரணம் எந்தக் கருத்தைச் சொன்னாலும் அவர்களுக்கு ஜீரணிக்கும் சக்தி உண்டு! நலலது எது, கெட்டது எது என்பதை ஆராய்ந்து பார்க்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு! எனவே தான் அவர்கள் கருத்து வேற்றுமைகளுக்கு தாராளமாக இடமளிக்கின்றனர்! இங்கே அப்படி இல்லை! ஒருவர் கருத்தை ஒருவா எடுத்துச் சொல்லி தப்பிக்க முடிவதில்லை! காரணம் இவர்களுக்கு ஜீரணிக்கும் ஆற்றல் கிடையாது! ஆராய்ந்து பார்க்கும் சக்தியும் கிடையாது! எனவேதான் கத்திகளைத் தூக்கி கப்படாக்களைக காட்டி—தன்னால் முடியாவிட்டால் கூலியாட்களை வைத்து இதுபோன்ற விபரீத காரியங்களில் இறங்குகிறார்கள்!" உதயசூரியன் தந்த விளக்கம் உண்மையிலேயே டாக்டரை புது மனிதராக்கி இருக்கும்!

"உங்களை அடியாட்கள் வைத்தா அடித்தார்கள்!"

"ஆமாம், டாக்டர்! இந்த நாட்டில் பெரும்பாலோர், வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு பெரும்பாலான காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள்! இங்கு தன்னைத் தானே நம்பி எவரும் இருப்பதாகத் தெரியவில்லை! எதையும் நேராகச் செய்வதில்லை, மறைமுகமாகத்தான் செய்வது வழக்கம். எதையும் பிறர் மூலமே செய்துதான் தப்பித்துக் கொள்வதுதான் இங்கு பெரும்பாலோரின் பண்புமாகும்!" உதயசூரியனுடைய பேச்சு டாக்டரை வெகுவாகக் கவர்ந்து விட்டது போலும்! அதனால்தான் அவர் ஆடாது, அசையாது அப்படியே உட்கார்ந்து விட்டார் போலும்!

"சரி! உங்களுச்குக் கடவுள் உண்டா? இல்லையா? பலர் உங்களை நாத்திகர்கள் என்று கூறுகிறார்களே!" டாக்டர் மெதுவாக அரசியலுக்கே வந்து விடுவார் போலும்!

"எங்களுக்கு நிச்சயமாக கடவுள் உண்டு! என்னைப் பொறுத்தவரையில் நீங்கள்தான் எனக்குக் கடவுள்!" உதய சூரியன் டாக்டரின் ஆவலைத் தூண்டினான்!

"அதெப்படி உதய சூரியன், நான் கடவுளாக முடியும?"

"நீங்கள் இல்லாவிட்டால் நீங்கள் மருத்துவம் செய்யாவிட்டால் நான் உயிர் தப்பி இருக்க முடியாது! எனவே நீங்கள் தான் என் கண்கண்டதெய்வம்" டாக்டர் தலையில் உதயசூரியன் ஐஸ்கட்டி வைக்க ஆரம்பித்தான்!

பாரதியை பட்டினிப் போட்டு கொன்றவர்கள் இன்று விழா கொண்டாடி மகிழ்கிறார்கள்!

பாரதி சோறு சோறு என்று தவித்தார் - பாரத புத்திரர்களோ அவரை விரட்டி விரட்டி அடித்தனர்!

அவர் மாண்டார் மணிமண்டபம் கட்டினீர்கள்! அவர் செத்தார் விழா கொண்டாடுகிறீர்கள் !!

நீலிக் கண்ணீர் வடிக்கும் போலி பக்தர்களே உங்கள் ஜாலம் எத்தனை நாளைக்குச் செல்லும் ?

ஏறத்தாழ ஏழெட்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் தேசிய கவிஞர் பாரதி விழா இவ்வாண்டும் நடைபெற்றிருக்கிறது! பாரதியாரின் திடீர் பக்தர்கள் இந்த விழாவை கோலாகலத்துடன் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள்! மகிழ்ச்சியடைகிறோம்; எந்த நோககத்திற்காக இந்த விழா கொண்டாடப்பட்டாலும், எநத இலட்சியத்தை மனதிலே கொண்டு பாரதியாரின் மீது திடீர் காதல் கொண்டு விழா நடத்தினாலும் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

தமிழகத்தின் பழக்கமே செத்தவர்களைத்தான் போற்றுவது, செத்தவர்களைத்தான் பாராட்டுவது - செத்தவர்களுக்குத்தான் சீரும், சிறப்பும் செய்வது!

உயிரோடு இருக்கும் தந்தையை கவனிக்கமாட்டான்! அவன் பசிக்கு ஒரு பிடி சோறுபோட்டு, அவன் உள்ளத்தை மகிழ்விக்க மாட்டான்! தந்தை பிணமாகிவிட்டால் - பல்லக்குக் கட்டுவான், மேளதாளம் கொட்டுவான், வாண வேடிக்கை வைப்பான், நடைபாவாடை போடுவான், புத்தாடை உடுத்துவான், பசும் பால் பொங்கல் வைத்துப் படைப்பான்! "அப்பா' என்பான்! 'ஐயோ' என்று கதறுவான்! அழுது புலம்புவான்—ஊர் மெச்ச உருளுவான். புரளுவான்! கோதானம் கொடுப்பான், பூதானம் செய்வான்! இது பாரதியாருக்கும் விதிவிலக்காக இருக்கவில்லை!

சுப்பிரமணிய பாரதியார் 1882ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி பிறந்தார். 1921ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் தேதி இறந்தார்! அவர் வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள்! இந்த முப்பத்தி ஒன்பது ஆண்டு காலத்தில் அவர் பட்ட தொல்லைகள், அடைந்த இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல!

பசி பசி என்று திரிந்தார், அதைப் போக்க வேலை, வேலை என்று அலைந்தார்! அவருடைய வாட்டத்தைப் போக்க, வறுமையை ஒழிக்க எந்த தேசபக்தர்களும் முன்வரவில்லை! காந்திப் பாட்டுப் பாடி, கதர் சொக்காய் போட்டு, காரிலே போய் வந்த கனவான்கள் கூட கண் எடுத்தும் பார்க்கவில்லை!

"எங்கள் பாரதி, எங்கள் பாரதி" என்று சொந்தம் பேசி பந்தம் கொண்டாடிடும் கதருடை கனவான்களில் பெரும்பாலோர் பாரதியை பார்க்கவும் மறுத்தனர்!

பட்டினி கிடந்தார் அமரகவி பாரதியார்! பட்டினி கிடந்தார்—ஒரு வேளையல்ல, பலவேளைகள் பட்டினி கிடந்தார்! இராப் பட்டினி கிடந்தார், பகல் பட்டினி கிடந்தார்! குடல் கருகி, உடல் மெலிந்து, உள்ளம் சோர்ந்து, ஊர் ஊராய் நடைபிணம்போல் சுற்றி சுற்றி அலைந்தார்!

கட்டத் துணியின்றிக் கந்தலை உடுத்தினர்! இருக்க இடமின்றி மர நிழலை நாடினர்!

மகாகவி பாரதியார் மகாத்மாவைப் போற்றிய காரணத்தால், மகாத்மாவின் சிஷ்ய கோடிகளே வெறுத்தார்கள், வெளியே பிடித்துத் தள்ளினர்கள், வேலையிலிருந்தும் நீககினர்கள்! காந்தியின் விடுதலை நாமத்தை உச்சரித்துக்கொண்டே, தலையில் கதர்ச்குல்லாயை அணிந்துகொண்டே பாரதியின் உயிருக்கு உலைவைத்தவர்கள் தான் இன்று விழாகொண்டாடுகிறார்கள்! செத்தவர் படத்தை வைத்துப் பூமாலை சாத்திப் புகழ்கிறார்கள்!

சோறு போட மறுத்தவர்கள் தான் இன்று விழாக் கொண்டாடுகிறார்கள்! அவரது கவிதைகளின் சொகுசுகளை பற்றி வானளாவப் புகழ்கிறார்கள்!

மகாமவி பாரதியாருக்கு இன்று மணிமண்டபம்! அன்று அவர் தங்க ஒரு அங்குல நிழலின்றித தவித்தார்! தவியாய்த் தவித்தார்!

"வந்தே மாதரம்" பாடியவருக்கு காந்தி சிஷ்யர்கள் அளித்த பரிசு இதுதானா என்று கேட்க அன்று நாதியில்லை—நாங்கள் இல்லாத காரணத்தால்.

"கொட்டு முரசே! கொட்டு முரசே" என்று குரலெழுப்பிய அந்த வீரனுக்கு கொட்டும் கொடுந்தேளை பரிசளித்த கொடும்பாவிகளே! உங்களுக்கு விழா ஒரு கேடா?

"விடுதலை, விடுதலை" என்று பாடிய அந்த உத்தமனுக்கு இந்த உலகத்தை விட்டே விடுதலையளித்தார்கள்! நெஞ்சமில்லா வஞ்சகர்களே, உங்கள் விழாவைக் கண்டு பாரதியார் மகிழ்வார் என்று நினைக்கிறீர்கள்? ஒருக்காலும் மகிழமாட்டார்! ஒருக்காலும் மகிழமாட்டார்!

உங்களை நினைத்துத்தான் "நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்" என்று பாடினர் போலும்!!

"பாரதியார் இருந்திருந்தால்" என்று சிவஞான கிராமணியார் வீராப்புப் பேசினாராம்! இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்று நினைக்கிறாய்? உன் நெஞ்சை பிளந்திருப்பார், அங்கே வஞ்சகம் படர்ந்திருப்பதைத் கண்டிருப்பார்! உன் கதர் சொக்காயை கழட்டி இருப்பார்! நிறமாறும் உன் உருவத்தைப் பார்த்து உமிழ்ந்திருப்பார்! உன்வாயைப் பிளநதிருப்பார், நாக்கு ஒன்று, இரண்டா என்பதைப் பார்த்திருப்பார்!

நீயா சொல்லுகிறாய், பாரதியார் இருந்திருந்தால்...என்று!

பாரதியார் இருந்திருந்தால் என்ன சொல்லி இருப்பார்:

(9ம் பக்கம் பார்க்க)

ஐந்தாண்டுத் திட்டம் ஒரு சதித் திட்டம் தென்னகத்தை ஏய்க்கப் போடப்படும் ஒரு வஞ்சகத் திட்டம்!

இந்த மூன்ரும் திட்டத்தில் ரயில் பாதைகள் இடம் பெற்றனவா ?

நேருவிடம் மோடி செய்த வெங்கட்ராமன் ஒளிக்காமல் பதில் சொல்லட்டும்!

சென்னையில் சம்பத் முழக்கம்

அன்புள்ள தலைவர் அவர்களே! தாய்மார்களே! அருமைத் தோழர்களே! இன்றைய தினம்பூரிப்போடும், பெருமையோடும் - நாம் வளர்ந்துள்ள வளர்ச்சியைப் பற்றி எண்ணி பெருமிதம் கொண்டு மகிழ்ச்சி யோடுவிழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்!

இன்றையதினம் கடற்கரை மணற்பரப்பிலேகூடி, மகிழ வேண்டிய நாம் வேறுஒரு கட்சியின் கூட்டம் நடைபெருகிற காரணத்தால் இந்த இடத்திலே கூடியுள்ளோம்!

வட சென்னை கோடியிலிருந்து புறப்பட்டு மிகப்பிரம்மாண்டமான ஊர்வலத்தொடு தென் சென்னை கோடியை வந்தடைந்துள்ளோம்! கொஞ்சமும் அலுப்பும், சலிப்பும் இல்லாமல் இந்த நீண்ட நெடுந் தூரத்தைக் கடந்து வந்துள்ள தோழர்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும் எண்ணி எண்ணி மகிழ்ச்சி யடைகிறேன்!

இந்த சக்தி திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு மட்டும் தான்; இந்த ஆர்வம், இந்தஆற்றல் திராவிடமுன்னேற்றக் கழகத்தினரிடம் மட்டும் தான் காணமுடிகிறது! இந்தபெரும் அற்புத சக்தியை நாம்எப்படி அடைந்துள்ளோம்?

திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த கதையைப்பற்றி-ஆசைத் தம்பி ஒரு வரலாற்றுப் பேராசியரைப்போல் உங்களிடம்எடுத்து விளக்கிக் கூறினர்! அந்தப்பெரும் கதைக்கு ஒரு பெரும் விளக்கத்தையே தந்திருக்கிருர்!

1949-ம்ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ம்நாள் சென்னை ராபின்சன் பார்க்கிலே-மறைந்த மாவீரர், கோவை பெத்தாம் பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையிலே திராவிட முன்னேற்றக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது!

கடும் மழைபெய்துக் கொண்டிருந்தபோதிலும் 30 ஆயிரம், நாற்பதாயிரம் பேர் கூடியிருந்தனர்! அந்த மழையில் நனைவது அவர்களுக்கு திருவிழாபோல் இருந்தது! பவழக் காரத் தெருவில்-இங்கு வீற்றிருக்கின்ற அருமை நண்பர் ஷண்முகம் அவர்கள் வீட்டிலே கூடிப் பேசிவிட்டு கொட்டுகின்ற மழையிலும் அறிஞர் அண்ணா அவர்கள்புறப்பட்டு வந்தார்கள்!

ஆர்வம் ததும்ப, அறிஞர் அண்ணா அவர்களின் வருகையை எதிர்நோக்கிய படியே, ஆடாது, அசையாது பெய்கின்ற மழையிலே நனைந்துகொண்டிருந்தார்கள்! அவசரம் அவசரமாக போடப்பட்ட மேடை. மழையின் காரணமாக, மேடையும் சாய்ந்து விட்டது! சாய்ந்த நிலையிலும்கூட அந்த மேடையிலே அறிஞர் அண்ணா அவர்கள் உட்கார்ந்தார்கள்! அந்தக் காட்சியை இன்று கண்முன்னாலே கொண்டு வந்தேன்! எண்ணி எண்ணி மதிழ்ந்தேன்!

இந்தக் கூட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிற மேடையைப் போல் இது வரையில் எந்தக் கூட்டங்களிலுமே அமைக்கப்படவில்லை! மிக்க உறுதியாகவும், வலிவாகவும் இந்த மேடையை நமது நண்பர்கள் அமைத்திருக்கின்றார்கள்! இந்த மேடையைப் பற்றி நண்பர்களைக் கேட்டேன்—அவர்கள், ''இது குத்துச் சண்டை மேடை'' என்று கூறினர்கள்! நம்முடைய மேடையும் அந்த நிலையைப் பெற்றிருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையை, மதிப்பை, வலிவை தமிழகத்து மண்மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமே அறியும்! இந்த மாபெரும் அரசியல் சக்தியை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ளது!

பதினேறு ஆண்டு காலம்—அரசியலில் ஒரு கொடிப்

(10ம் பக்கம் பார்க்க)

பாரதி இன்று வாழ்ந்தால் பாரதத்தின் போலி ஐக்கியத்தை உடைத்திருப்பார்

முரசுகொட்டி திராவிடம் கேட்டிருப்பார்!

நன்றிகெட்ட காங்கிரஸ்காரர்களை நாடறியச் செய்திருப்பார்— நாணயமற்ற சிவஞானத்தை விரட்டியடித்திருப்பார்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

★ கொட்டடா, நன்றி கெட்ட மனிதர்கள் ஒழிய கொட்டடா முரசம் கொட்டடா!

★ கேளடா முரசம் கொட்டி கேளடா, திருவிடம் கேளடா நாம் வாழக் கேளடா!

★ சொல்லடா, நாடெங்கும் சொல்லடா தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்க இது வழியென சொல்லடா- முரசு கொட்டிச் சொல்லடா!

என்றுதான் புதுக் கவிதை இயற்றி புரட்சிப் பாதையில் நடந்திருப்பார்! நீ சொல்லுவது போல் "முப்பதுகோடி முகமுடையாள்" என்று இன்னமும் பாடிக் கொண்டிருக்கமாட்டார்! அந்தப் பாடலுக்காக வருந்தி இருப்பார்!

நீ சொல்லுவது போல்— "மன்னுமிமயமலை எங்கள் மலையே" என்று சொல்லி பாரதத்தின் ஐக்கியத்தை—இன்னமும், உங்களது யோக்கியதையை பரிபூரணமாகத் தெரிந்துக் கொண்ட பின்பும் பாதுகாத்துக் கொண்டிருக்கமாட்டார்! "தமிழ் மன்னனின் எல்லை வட மாலவனின் குன்றமே" என்றுதான், உன் தொங்கிய மீசை இன்னமும் தொங்கயாடி இருப்பார்!

உன்னைப் போல் விவேகம் கெட்டு, விவஸ்தைக் கெட்டு, மானம் கெட்டு, மரியாதைக் கெட்டு, "உரிமைக்கு வேங்கடம், உறவுக்கு இமயம்" என்று பேசித் திரிந்து கொண்டிருக்க மாட்டார்!

பாரதியாருக்கு விழா கொண்டாடி, பாரதியின் புகழை நிலைகாட்ட வந்த உங்களுக்கு அரசியல் என்ன வேண்டியிருக்கிறது! பிரிவினையைப் பற்றி பேச்சென்ன வேண்டியிருக்கிறது!

பாரதியின் பெருமையைச் சொல்லு! அதைச் சொன்னால் அவருக்கு சோறு போடாமல் விரட்டியடித்த கதையையும் சொல்லவேண்டுமே என்பதால் எங்கள் மீது பாய்கிறாயா? என்ன காரணம், எங்கள் மீது பாய்வதற்கு?

பாரதியின் மகிமையைச் சொல்லுவதை விட்டு விட்டு, பாரதியின் திறமையைச் சொல்லுவதை விட்டு, பாரதியின் விடுதலை உணர்ச்சியை சொல்லுவதை விட்டுவிட்டு எங்கள்மீது ஏன் பாய்கிறாய்?

வேஷம் போடும் போலிகள்!

★★★

நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமுமின்றி,
வஞ்சனை சொல்வா ரடி!—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி

கூட்டத்திற் கூடிநின்றி கூவிப் பிதற்ற லன்றி.
நாட்டத்திற் கொள்ளா ரடி!—கிளியே!
நாளில் மறப்பா ரடி!

கண்கள் இரண்டி ருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்ட மடி!—கிளியே!
பேசிப் பயனென் னடி!

உப்பென்று சீனி என்றும் உள் நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடி!—கிளியே!
செய்வ தறியா ரடி!

மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயி ரைக்—கிளியே
பேணி யிருந்தா ரடி!

அச்சமும் பேடி மையும் அடிமைச் சிறும தியும்
உச்சத்திற் கொண்டா ரடி!—கிளியே!
ஊமைச் சனங்க ளடி!

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்—கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ?

பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப்
பழமை இருந்த நிலை!—கிளியே;
பாமர ரேதறி வார்!

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா!—கிளியே!
வந்தே மாதர மென்பார்!

-பாரதியார்

பாரதிக்கு விழா கொண்டாடி பாரதியைப்பற்றி நீண்ட நெடு நேரம் புகழாரம் சூட்டிவிட்டு மகிழ்வதால் மட்டும் உங்களை நாடு போற்றாது, பாராட்டாது!

உங்களுடைய பக்தி, அந்த போலி பக்திக்குள் மறைந்து கிடக்கும் வஞ்சகம், அந்த வஞ்சகத்தோடு உறவாடி கிடக்கும் சூது, அந்த சூதோடு பந்தம் கொண்டாடிக் கிடக்கும் சுயநலம் அத்தனையையும் நாடு அறியும்!

பாரதியார் மறைந்து ஏறத்தாழ நாற்ப தாண்டுகளுக்கு மேலாகிறது! அப்போதெல்லாம் இல்லாத பக்தி, அப்போதெல்லாம் இல்லாத பாசம் இந்த பத்தாண்டு காலத்தில் மட்டும் எப்படி வந்தது? ஏன் வந்தது? எதற்காக வந்தது? எதை எதிர்பார்த்துக் கொண்டு வந்திருக்கிறது!

கட்சியில்லை, கட்சியில்லை என்று சொல்லுபவர்களெல்லாம், "கட்சி கூடாது. கட்சி கூடாது" என்று முரசு கொட்டுபவர்களெல்லாம் பாரதியின் பெயரால் அரசியல் வாண வேடிக்கையில் கலந்துகொண்டு கண்கவர் காட்சிகளைக் கண்டு ரசிக்கக் காரணமென்ன?

பாரதியின் பெருமையை சொல்வதாயிருந்தால் சொல்லுங்கள்! இல்லாவிட்டால் அந்த மக்கள் கவிஞனுக்கு, அந்த மக்கள் கவிஞனின் தொண்டுக்கு, புகழுக்கு, பெருமைக்கு, மதிப்பிற்கு களங்கம் விளைவிக்க வேண்டாம்! பாரதியார் இங்கிருந்திருந்தால் "பாரதம் வீழ்க, தமிழ்த் திருநாடு வாழ்க" என்றுதான் முழக்கம் செய்திருப்பார்!

தேமதுர தமிழோசையை தெருவெல்லாம் ஒலிக்க வகை செய்யாத பாவிகளே, "யாமறிந்த மொழிகளிலே தமிழைப்

(12ம் பக்கம் பார்க்க)

மாபெரும் அரசியல் சக்தியைப் பெற்றது நமது கழகம்

நம் பெயரைச் சொல்ல மறுத்தவர்கள், பெரும் அரசியல் பிரச்சினைகளில் கழகக் கருத்தறிய விரும்புகிறார்கள்!

இருட்டு வேளையில் நம்மைக் கொல்லலாம்; ஆனால் நம் மூல பலத்தை மட்டும் அழிக்க முடியாது!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது! அந்த நொடிப் பொழுதில் நாம் பெற்றுள்ள, நாம் அடைந்துள்ள வளர்ச்சியை வேறு எந்தக்கட்சிகளுமே பெற்றிருக்க முடியாது!

திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தபோது அதன்நிலை மிகப் பயங்கரமாகவே இருந்தது! ஒரு சில தலைவர்கள் நம்முடைய பெயரைக் கூடச் சொல்ல மறுத்தார்கள்!" பெயர் சொல்லி அழைக்கின்ற அளவுக்கு அது வளராது, அது வாழாது, அது வலரயில் இதற்கு ஆயுளே இருக்காது" என்றெல்லாம் எண்ணியவர்களும் உண்டு!

இன்றைய நிலை என்ன? பலாய் பாங்க் முறிந்தது முதல், மொழிப் பிரச்சினை வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை அறிய விரும்புகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொல்லுகிறது! ஏன் அந்தப் பிரச்சினையைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் எதுவும் சொல்லவில்லை! இந்தப் பிரச்சினையைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதி என்ன சொல்லுகிறார் என்று மந்திரிகளெல்லாம் நம்முடைய கருத்தை அறிந்து கொள்ள மிக்க ஆவலோடு இருக்கிறார்கள்! இது நாம் பெற்றுள்ள சக்தியின் பெருமையைத்தான் எடுத்துக் காட்டுகிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்த மூலபலம் எப்படிக் கிடைத்தது? இந்த மூல பலத்தின் சக்தியை நாம் எப்படிப் பெற்றோம்! தயவு செய்து இந்த மைதானத்தைப் பாருங்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் பரந்து கிடக்கிறது! அதன் வலிவும், பொலிவும் ஓங்கி வளர்ந்து கிடக்கிறது! இந்த மூல பலத்தை எந்த சக்தியால் அழிக்க முடியும்?

இருட்டு வேளையில் குடந்தை இராமலிங்கத்தைக் கொல்லலாம்! ஆனால் இந்த மூலபலத்தின் சக்தியை எந்த முறையாலும், எந்த இழிசெயலாலுமே அழிக்க முடியாது!

ஆள் எண்ணிக்கையில் மட்டுமல்ல—தமிழகத்தின் மண்ணிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் வேரூன்றி விட்டது! இதை அழிக்கவோ, ஒழிக்கவோ எவராலுமே இனி முடியாது!

திராவிட முன்னேற்றக் கழகம், நியாயத்திற்கும், நேர்மைக்கும் பணி புரிந்து வருகிறது!

நம்மை இதுவரை எதிர்த்து வந்த ஜென்மங்களான சுப்பிரமணியம், வெங்கட்ராமன் போன்றவர்கள் டெல்லியின் கொடுமைகளை ஓரளவாவது உணர்வார்கள் என்றே எண்ணுகிறோம்!

டெல்லியிலே அமைச்சர் வெங்கட்ராமன் தென்னகத்திற்கு ரயில்பாதை அமைக்கப்படவேண்டும் என்று கூறி இருக்கிறார்! "ரயில் பாதை அமைக்காவிட்டால் தென்னகத்து மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள்" என்று ஏதோ சொல்லி—"இதோ கேட்டு விட்டேன்—என் பொறுப்பு விட்டது" என்பதுபோல் திரும்பி வந்திருக்கிறார்! நிலைமை என்ன? இப்போது தீட்டப்பட்டிருக்கிற ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னகத்திற்கு பெரும் கொடுமை செய்யப்பட்டிருக்கிறது! இதற்குப் பெயர் ஐந்தாண்டுத் திட்டமா? திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை சதித் திட்டம் என்றே எண்ணுகிறது!

அமைச்சர்கள் கூறுகிறார்கள்—"தென்னாட்டில் தகுதிக்கு மேல், அளவுக்குமேல் பங்கு கிடைத்து விட்டது" என்று!

"பக்ராநங்கல் அணைக்கட்டை எடுத்துச் சொன்னால்—பஞ்சாப் ஆறு ஓடுகிறது—இங்கே எந்த ஆறு ஓடுகிறது" என்று காமராஜா கேட்கிறார்!

வெங்கட்ராமனோ இங்கு ரயில் பாதை போடவில்லை என்று கூறுகிறார்!

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நேஷனல் ஜோவை கௌன்சிலுக்கு ஒரு நோட், ஒரு குறிப்பு அனுப்பி வைத்திருக்கிறார்! என்ன குறிப்பு அது? அந்த குறிப்பில் அவர் குறிப்பிட்டிருப்பது என்ன? ஆயிரம் ஆயிரம் மேடைகளில், இதுவரை நாம் எதைச் சொல்லி வந்தோமோ, தினம், தினம் நாம் எதை மக்களிடம் எடுத்து விளக்கி வந்தோமோ அதையேத்தான் அவர் குறிப்பாக அனுப்பி வைத்திருக்கிறார்!

"ரயில்வே போக்குவரத்து கேட்டால் தொழிற்சாலை இல்லை என்கிறீர்கள்! தொழிற்சாலை கேட்டால், போக்குவரத்து வசதியில்லை என்கிறீர்கள்! இது முறையா" என்று முறையிட்டிருக்கிறார்!

ஆயிரமாயிரம் மேடைகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வந்த கருத்துக்கள் அமைச்சருக்கும் ஒரு கைவாள் போல் பயன்பட்டிருக்கிறது!

"இந்தியை பொதுமொழியாக்கக் கூடாது" என்று கூறினால்... "முடியாது—இந்திதான் இருக்கவேண்டும், அந்த மொழியைத்தான் பெரும்பாலான மக்கள் பேசி வருகிறார்கள்" என்று மிக்கக் கர்வத்தோடு கூறி வந்தார்!

கோடம்பாக்சம் மாநாடு நடைபெற்று முடிந்த 48வது மணி நேரத்தில் இதே அமைச்சர் அவசர அவசரமாக பத்திரிகையாளர்களை அழைத்து வேண்டுகோள் விடுககத் தொடங்கினார்! "இந்தி எதிர்ப்பை ஒரு கட்சிதானா நடத்த வேண்டும்! அந்த கட்சிக்குமட்டும் தானா இந்தி எதிர்ப்பை நடத்த உரிமை இருக்கிறது! மொழிப் பிரச்சினை ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல! ஒன்று சேர்ந்து எதிர்ப்போம்—நாங்கள் கைவிட்டு விட்டால் தி. மு. க. நடத்தட்டுமே" என்று பொருள் பட கூறி இருக்கிறார்!

எனது அருமை நண்பர் மதியழகன் நடத்துகின்ற "தென்னகம்" என்ற ஏட்டில் படித்தேன்—"மாணவர்கள் காமராஜரை அணுகினார்களாம்! சுப்ரீம் கோர்ட்டில் இந்தி திணிக்கப்படுமா என்று அவரைப் பார்த்துக் கேட்டார்களாம்! அதற்கு காமராஜர், "இன்னும் 150 ஆண்டுகளுக்கு சுப்ரீம் கோர்ட்டில் இந்தி வராது" என்று கூறினாராம்! "அவருக்கு அந்த ஆற்றல் இருக்கிறதா" என்பது வேறு விஷயம்! ஆனால் இதைச் சொல்வதற்கு துணிவு பிறந்ததே என்றுதான் நாம் நினைக்க வேண்டும்! இவருடைய விருப்பத்தை நமக்குச் சொல்ல விரும்புகிறார் என்பதைத்தான் நாம் அறியவேண்டும்!

நம்மை யார், யார் கேலி செய்தார்களோ, நம்மை யார், யார் இழித்தும், பழித்தும் மாசு கற்பித்தும் பேசி வந்தார்களோ—அவர்களே "ஐந்தாண்டு திட்

(8ம் பக்கம் பார்க்க)

"அதெல்லாம் சரிதான் உதய சூரியன்! கடவுள் இல்லாமல் எப்படித்தான் இந்த உலகம் இயங்கும்!

"டாக்டர் சார்! நீங்களே இப்படிக் கூறினல் மற்றவாகள் ஏன் கூற மாட்டார்கள்! மனிதன் கடவுளுடைய படைப்பு என்கிருர்கள்! ஆனல், கண்களை இழந்தவனுக்கு நீங்கள் கண்களை வைக்கறீர்கள், கால்களை இழந்தவனுக்கு நீங்கள் கால்களைவைக்கிறீர்கள், எலும்பு முறிந்து விட்டால் அதைச் சரி செய்கிறீர்கள்—காயம்பட்டு விட்டால் ஆற்றுகிறீர்கள்! எல்லாம் நீங்கள்தான் செய்கிறீர்கள்!"

"இதற்கும், கடவுளுக்கும் என்ன சப்பந்தம்!

"சம்பந்தம் ஒன்றுமில்லை என்றுதான் கூறுகிறேன்"

"அப்போ, எல்லாம் மனிதன் செயல்தான் என்று கூறுங்கள!"

அதில் சந்தேகமென்ன டாக்டர், மனிதனல் தான் எல்லாம் நடை பெறுகின்றன! கடவுள் இல்லாவிட்டால் இந்த உலகம் இயங்கும். மனிதன் இல்லாவிட்டால் இந்த உலகம் ஒரு வினுடிநேரம் கூட இயங்காது!

"ஒரு கடவுள்கூட இல்லைஎன்கிறீர்களா?"

அதுதான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேனே டாக்டர்! நீங்கள்தான் கடவுள்!

"அதெப்படி உதய சூரியன் நான் கடவுளாக முடியும!

"டாக்டர் சார்! ரௌடிகளால் நான் டலமாகத் தாக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த நான், நேராக ஆண்டவன் குடியிருக்கும் ஆலயத்திற்குச் சென்று, அபிஷேகம் செய்து சூடமேற்றி தூப தீபம் காட்டி இருந்தால் என் உயிர் இந்நேரம் என் உடலை விட்டே பிரிந்திருக்கும்! நேராக உங்களிடம் வந்த காரணத்தால்தான், ஏற்ற வைத்தியம் செய்து என்னை பிழைக்க வைத்திருக்கிறீர்கள்! அப்போது நீங்கள் தானே எனக்குக் கடவுள்." உதய சூரியனுடைய விளக்கம் டாக்டரை கொஞ்சம் கொஞ்சமாக தெளிவுடுத்தயே வந்தது!

"என்ன இருந்தாலும் அவன் செயல்தானே உதய சூரியன்!"

"அப்படிச் சொல்லாதீர்கள் டாக்டர்! அவன் செயலதான் என்றுல் எங்களுக்கு உங்களிடம் வேலை இல்லை! நேராக அவனிடமே போயிருப்போம்! பிறகு டாக்டர் தேவையில்லை, வைத்தியமும் தேவையில்லை."

"என்ன, கடைசியில் என் தலையிலேயே கைவைக்க ஆரம்பிச்சுட்டிங்களா?"

"அமாம், டாக்டர் சார், அப்படி வைச்சாதான் உங்களுக்கும் நேரடியாகப் புரியும்."

"அதுசரி, உதய சூரியன், நீங்கள் காங்கிரஸ் கட்சியை எதிர்க்கிறீர்களே, அது உங்களால் முடியுமா?"

"ஏன் முடியாது டாக்டர்,"

"காங்கிரஸ் கட்சிதான் இப்போ ஏழைங்களுக்கு எல்லா உதவிகளும் செய்து கொண்டே வருகிறதே! நீங்கள் என்ன செய்ய முடியும்?"

"காங்கிரஸ் ஏழைகளுக்கு உதவி செய்திருக்கிறதா?" உதய சூரியன் வியப்போடு கேட்டான்!

"எத்தனையோ உதவியை செய்திருக்கிறது. செய்து கொண்டும் வருகிறது! நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து பணக்காரர்களின் ஏகபோக உரிமையை ஒழித்துக் கட்டிவிட்டு ஏழைகளின் நல்வாழ்வுக்கு உதவி செய்யவில்லையா?"

"யார் அப்படி உங்களுக்கு சொன்னது?"

ஏன், அதைக்கூட பொய் என்கிறீர்களா?"

"தயவு செய்து எங்களை அப்படி நினைக்காதீர்கள்! நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்திருப்பது உண்மை தான்! அதனல் ஏழைகள் அடைந்த லாபம் என்ன என்பதுதான் எங்களுக்கு விளங்கவில்லை! உங்களால் விளங்க வைக்க முடியுமென்றுல் விளக்கிச் சொல்லுங்கள்" உதயசூரியனுக்கு கொஞ்சம் ஆத்திரம் உண்டாகத்தான் செய்தது!

"ஏன்? உச்சவரப்பு போக மிச்சமுள்ள நிலத்தை ஏழைகள் தானே அனுபவிக்கிருர்கள்!"

"சட்டத்தில் அப்படி ஏதாவது சொல்லி இருக்கிறதா?"

"ஆமாம்! மிச்சமுள்ள நிலங்களை ஏழைகள்தானே அனுபவிக்கிருர்கள்."

"அதை நான் கேட்கவில்லை மிச்சமுள்ள நிலங்களை ஏழைகளுக்குத் தருப்படி சட்டம் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானல் இங்குள்ள ஏழைகளுக்கு அந்த பயன் கிடைத்திருக்கிறதா?"

"ஓ, நிச்சயமாக கிடைத்திருக்கிறது" டாக்டர் ராஜன் தைரியமாகவே சவால் விட்டுக் கூறினர்.

"ஒருநாளும் கிடைத்திருக்காது! உச்சவரம்பு சட்டம் வருவதற்கு முன்பே நிலமுதலைகள் தன் பெண்டுக்கும், பிள்ளை குட்டிகளுக்கும் உற்ருர் உறவினர்களுக்கும் பங்கு போட்டு கொடுத்து விட்டனர். மிச்சம் எதுவுமில்லை என்ற கணக்கையும் காட்டி விட்டனர். அப்படியே மிச்சமிருந்தாலும்அது ஏழைகளுக்குத்தான் தர வேண்டும் என்ற சட்டமும் கிடையாத.

உதய சூரியனும் மிக்க துணிச்சலோடுதான் வாதாடினன்.

இல்லை! நீங்கள் சொல்லுவது போல் இல்லை! எங்கள் குடும்பமே, எங்கள் தந்தையே இந்த உச்சவரம்புச் சட்டத்தின் பயனை அனுபவித்துக் கொண்டு வருகிருர். ஆத்தூர் மாஜி ஜமீந்தார் தருமலிங்கம் பிள்ளையின் பண்ணையில் என் தந்தை வேலை பார்த்து வந்தார். உச்ச வரம்புக்கு மேற்பட்ட சொச்சத்தை என் தந்தை பெயருக்கே எழுதியும் கொடுத்து விட்டார். "டாக்டர் ராஜனுடைய இந்த விளக்கம் உதய சூரியனை திக்கு முக்காட வைத்தது."

"ஆச்சரியமாக இருக்கிறது டாக்டர்! என்னல் நம்பவே முடிய வில்லை டாக்டர்".

இன்னமும் நம்ப வில்லை டாக்டர் இனியும் நம்ப மாட்டேன் டாக்டர்.

"அப்படின்னு நான் சொல்லுவதெல்லாம் பொய் என்று நினைக்கிறீர்களா?"

"அப்படி நினைக்கவில்லை டாக்டர்! நீங்கள் ஏதோ ஏமாந்து போயிருக்கிறீர்கள் என்றுதான் நினைக்கிறேன்."

"நாங்கள் அப்படி ஒன்றும் ஏமாந்தாதாகத் தெரியவில்லை! நீங்கள்தான் ஏமாந்து போயிருக்கிர்றீகள்"

"டாக்டர் சார்! அதைமட்டும் சொல்லாதீர்கள், நீங்கள் நிச்சயமாக ஏமாந்து தான் போயிருக்கிறீர்கள்."

"அப்படியா! ஏமாந்தால் பரவாயில்லை" என்று சிரித்துக் கொண்டே டாக்டர் புறப்பட்டார்."

(தொடரும்)

சமர்ப்பணம் :

காவடி பக்தர் காமராஜர் சிஷ்ய கோடிகளுக்கு!

கியூபா நாட்டின் பிரதமர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோவிற்கு அமெரிக்க மக்களின் தேசிய உணர்வால் மிகப் பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டதை எண்ணி சிந்தித்துப்பார்த்தால் இங்கிருக்கும் 'எட்டு பிரகஸ்பதி'களும், அவர்தம் சிடகோடிகளும். எடுபிடிகளும் நிச்சயமாகத் திருந்துவார்கள் என்று நினைக்கிருேம்.

நியூயார்க் ஓட்டல் ஒன்றில் பிடல் காஸ்ட்ரோ தங்கியதால் ஏற்பட்ட சேதத்திற்காக 10 ஆயிரம் ரூபாய் கேட்கப் பட்டது; அதில் பாதியை மட்டும் கொடுத்துவிட்டு ஓட்டலை விட்டு வெளியேறினுர் பிடல் காஸ்ட்ரோ! அதுமட்டுமல்ல; அவருக்கு எந்த ஓட்டலிலும் இடம் கொடுக்க அமெரிக்கர்கள் மறுத்துவிட்டனர்! இதனல் ஆத்திரமுற்ற காஸ்ட்ரோ, கியூபாவிலிருந்து கூடாரங்களைக் கொண்டு வந்து, ஐ. நா. சபைக்குச் சொந்தமான நிலத்தில் கூடாரம் அமைத்துத் தங்குகிறேன் என்றுகூட ஹாமர்ஷோல்டிடம் கேட்டாராம். அவரிடம் கேட்டுவிட்டு நடு நிசியில் ஐ. நா. கட்டிடத்தை விட்டு கொட்டும் மழையில் நனைந்துகொண்டே தான் தங்கியிருந்த பழைய ஓட்டலுக்குச் சென்றுவிட்டாராம்.

நாட்டின் பிரதமருக்கே இந்த கதி என்றுல் காவடி தூக்கும் இந்த கதர்க் குல்லாய்களுக்கு காலம் என்ன தண்டனையளிக்கப் போகிறதோ?

சத்தியவாணிமுத்து அம்மையார் செனட் உறுப்பினரானுர்!

சென்னை சட்ட மன்ற உறுப்பினரும், நம் கழகத்தின் முக்கியஸ்தருமான திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் சென்னை பல்கலைக்கழக செனட்டுககு சட்டமன்றத்தின் சார்பாக தேர்ந்தெடுக்க வேண்டிய ஏழு உறுப்பினர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். அம்மையாரின் சீரிய பணி செனட்டுக்குக் கிடைத்துஅவரின் பெருமதிப்பும் உயரும் என்று மகிழ்ச்சி யடைகிருேம்.

15 கோடி ரூ. வட்டி யில்லாமல் தனியார் பாங்கில் போட்டதேன்?

யார் வீட்டுப் பணம்? இதைச் செய்ய உங்களுக்கு உரிமை தந்தது யார்?

கைக் கூலி பெற சிலரைக் கொள்ளையடிக்க விடுவது நியாயமா?

சம்பத் பேச்சு

(10ம் பக்கத் தொடர்ச்சி)

டமா நானும் சொல்கிறேன்—மொழிப் பிரச்சினையா—நீ மட்டுமென்ன நானும் சொல்லுகிறேன்!" என்று உரிமை கொண்டாட வருகிறார்கள்! சேர்ந்து சொல்லுவோம் என்று உறவாட வருகிறார்கள்!

இதையெல்லாம் தெரிந்தவர்கள்—இதையே எங்கள் கட்சி கேட்டால் வசைமாரி பொழிவானேன்? இதை இவர்கள் எப்போது உணர்ந்தார்கள்?

காமராஜரும், சுப்பிரமணியமும் 1959ல் உணர்ந்தார்கள்! உதைபட்ட பின்பு 1960ல் உணர்ந்தார்கள்! நீங்கள் 1959–1960ல் உணர்ந்ததை நாங்கள் 1949-ம் ஆண்டிலேயே சொன்னோம். மக்களிடம் எடுத்து வைத்தோம் என்ற திருப்தி எங்களுக்கு இருக்கிறது!

"நாம் சொல்லும் கருத்துக்களை எதிர்ப்பார்களே" என்று நாங்கள் ஒரு போதும் அஞ்சவில்லை! நாட்டிற்குத் தேவையான நல்ல கருத்துக்களை எடுத்து வைக்க ஒரு நாளும் தயங்கமாட்டோம்! யார், யார் போனாலும் சரி, இருந்தாலும் சரி, எவர் எவர் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி எங்களுக்குத் துளியும் கவலை இல்லை! உயிரே போனாலும் சரி, எங்களது இலட்சியம் ஒரு நாளும் தடைபடாது!

சென்ற பொதுத் தேர்தலின் போது நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்! தனது வலிவுள்ள பேனாவால்—

> நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது!

என்று தீட்டித் தந்தார்! அதை போஸ்டர் மூலம் நாட்டு மக்களுக்கு அறிவித்தோம்!

அதற்கு சுப்பிரமணியம்—"அண்ணாதுரைக்கு பொருளாதாரத்தில் ஆனா, ஆவன்னா தெரியுமா" என்று கேட்டார்—இவர் என்னமோ "அக்கன்னா" வரையில் படித்ததுபோல்!

அதே கருத்தை இன்றைய தினம் ஆச்சாரியார் சொல்லுகிறார்—"நோட்டடித்தால், நாட்டின் வாட்டம் போகாது" என்று!

அச்சடிக்கப்பட்டு வரும் வெறும் காகித நோட்டுகளால் ஏற்படும் விபரீதங்களைப் பற்றி கொஞ்சமும் யோசித்ததாகத் தெரியவில்லை! விலைவாசிகளின் ஏற்றத்திற்கு என்ன காரணம் என்பதை இவர்கள் கண்டு பிடித்ததாகவும் தெரியவில்லை!

தாங்க முடியாத விலை உயர்வால் மக்கள் தவியாய்த் தவிக்கிறார்கள்! நாளுக்கு நாள் விஷம் போல் ஏறிக்கொண்டே வருகின்றன! இந்த நாடு இன்றைய தினம் அபாயத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது! புரட்சிப் புயல் மக்கள் உள்ளங்களிலே உருவெடுத்து வீசத் தொடங்கி இருக்கிறது! விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுக்காவிட்டால் என்ன நடைபெறுமோ! அதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது!

இங்குள்ள விலைவாசியை உலகத்திலுள்ள விலைவாசியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மிக்க கவலையும், திகைப்பும் ஏற்படத்தான் செய்யும்! இந்த விலைவாசி உயர்வு இங்குமட்டும் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது! இது, எங்கே கொண்டு போய்விடுமோ என்ற பெரும் கவலை நம்மைப் பிடித்து வாட்டி வதைக்கின்றன.

இன்றைய தினமுள்ள இந்த விலைவாசி காரணமாகத் தான் பொதுவாக நாடெங்கும் தொழில் தகராறுகளும் ஏற்படுகின்றன! இந்த விலைவாசியைக் காட்டித்தான் தொழிலாளிகள் கூலி உயர்வு கேட்கின்றனர்! "விலைவாசிகளெல்லாம் உயர்ந்து விட்டன, அதற்கேற்ற கூலி கொடுங்கள்" என்று கேட்கின்றனர்! "சரி, தருகின்றேன்" என்று கூலியையும் உயர்த்தித் தருகின்றனர்! மீண்டும் விலைவாசிகள் உயர்கின்றன! ஏழைகள் வாங்க முடியாத அளவு உயர்கின்றன! மேலும், மேலும் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகுமானால் இங்கே ஒரு பெரும் புரட்சி நிச்சயமாக ஏற்படத்தான் செய்யும்!

அடுத்தாற்போல், ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் அதிகாரங்களும் நம்மிடமில்லை! உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யவும். இங்கு உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதி செய்து லாபம் சம்பாதிக்கவும் நமக்கு ஏதும் வழியில்லை!

இந்த ஏற்றுமதி இறக்குமதி கொள்கையால் பல பெரும் பணக்காரர்களின் சலுகையைத் பெற முடிகிறதே தவிர அதனால் இந்த நாட்டிற்கு ஏதும் பயன் கிடைக்கவில்லை! தேர்தலுக்கு நிதி சேர்க்கவும், அதனால் பல முந்திராக்சைகளை உற்பத்தி செய்யவும் தான் இந்த கொள்கை பயன்பட்டு வருகிறது!

அடுத்து பல கம்பெனிகளில் குறும்புத்தனங்கள் நடைபெற்றிருக்கின்றன!

இன்சூரன்ஸ் கம்பெனி பொறுப்பிலுள்ள ஒரு பெரும் தொகை துஷ்பிரயோகப்படுத்தப்பட்டிருக்கிறது!

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்! பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர்—"எல். ஐ. சி. பண்டிலிருந்து பலகோடி ரூபாய் வட்டியில்லாமல் இல்லாமல் இரண்டு

(11ம் பக்கம் பார்க்க)

பழம் தின்னும் வெளவால்கள்!

நமது மந்திரிகள் இன்று காங்கிரஸ்கட்சியின்மீது அளவு கடந்த பற்றுடன் விடாப் பிடியாக ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றுநினைக்கிறீர்கள்? இல்லை, இல்லை! காங்கிரஸ் என்ற பெருமரம் பூத்து, காய்த்து, பழுத்து கனிகளைக் கொடுக்கும் என்ற நப்பாசையால் காத்திருந்து கனிகளைப் பெற்று விட்டனர். கனிகளோ தீர்ந்துவிட்டன! காங்கிரஸ் மரமோ புரையோடி விட்டது. எப்பொழுது ஒரு பெருங் காற்று அடிக்குமோ, என்று மரம்வீழுமோ என்றநிலையில் இன்று காங்கிரஸ் தள்ளாடுகிறது. இதை உணர்ந்து விட்ட அந்தப் பழம் தின்னும் வெளவால்கள் இப்பொழுது பூத்து, காய்த்து, கனிகொடுக்கும் பருவத்திலிருக்கும் நமது திராவிட முன்னேற்றக்கழகம் என்ற மரத்தின் மீது கண்வைத்திருக்கின்றனர். தரப் போகும் கனியை எண்ணி ஜலம் ஊற நாக்கை தொங்க விட்டுக் கொண்டிருக்கின்றனர்!

டாக்டர் சத்தியவாணி முத்து, எம் எல்.ஏ.

இந்த நாடு அபாயத்தின் விளிம்பில் நிற்கிறது !

விலைவாசியைக் கட்டுப்படுத்துங்கள்; இல்லையேல் பெரும் புரட்சி உருவாகும் !

வெறும் காகித நோட்டுகளைக் காட்டி மக்களை ஏமாற்றவேண்டாம் ! அது நாட்டை வளப்படுத்தாது ! வாழ்விக்காது !

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பேங்கில் போடப்பட்டிருப்பது உண்மையா" என்று கேட்டார் அதற்கு, அமைச்சர் கொஞ்சமும் அச்சப்படாமல் எழுந்து ",ஆம்" என்று பதில் சொல்லி இருக்கிறார் !

லைப் இன்சூரன்ஸ் (எல். ஐ. சி.) கம்பெனி பண்டிலிருந்து 15 கோடி ரூபாயை எடுத்து, தனியாரால் நடத்தப்படும் இரண்டு பேங்க்குகளில் போட்டிருக்கிறார்கள் ! "இதற்கு என்ன காரணம்" என்று கேட்டால் "முதலீடு செய்யப்பட்டிருக்கிறது" என்று பதில் சொல்லுகிறார்கள் !

முதலீடு செய்ய சர்க்கார் வசமுள்ள ஸ்டேட் பேங்க் இல்லையா ? ஏன், தனியாரால் நடத்தப்படும் பேங்குகளில் அதுவும், கரண்ட் அக்கவுண்ட்டில் போடவேண்டும் !

கரண்டு அக்கவுண்ட் என்றால், போடப்படுகின்ற ரூபாய்க்கு வட்டியே கிடையாது ! தைரியமாக, வட்டியில்லாமல். அதுவும் தனியார் துறையினரால் நடத்தப்படும் பேங்க்குகளில் 15 கோடியை போடுகிறார்கள் என்றால், அதுவும் முதலீடு என்ற காரணத்தைக் காட்டிப் போடுகிறார்கள் என்றால்என்ன பொருள் ? இந்த பதினைந்து கோடிக்கும் வட்டி கணக்கிடப்பட்டால் ஏறத்தாழ 52 இலட்ச ரூபாய்க்கு மேல் கிடைக்கும் ! இந்த பெருந் தொகையை இழக்க இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது ?

அதே நேரத்தில் முதலீடு குழுவுக்கு இதுபற்றி ஏதும் தகவல் இல்லை ! பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கூடிடும் முதலீடு குழுவுக்கு இதைப்பற்றிய தகவல் தெரிவிக்கப்படாமலேயே இருந்திருக்கின்றனர் !

கைக்கூலி வாங்குவதற்கென்றே சிலரை கொள்ளையடிக்க விட்டு வைத்திருக்கின்றனர் !

தென்னாட்டில் ரயில்வே பாதைகள் அமைக்கப்பட வேண்டுமென்றால் பட்டை நாமம் சாத்துகிறார்கள் !

வெங்கட்ராமன் வாதாடியும் பலன் கிடைக்கவில்லை ! முடியாது என்றுதான் சொல்லுகிறார்கள் ! வசதியில்லை என்றுதான் கூறுகிறார்கள் ! "தென்னாடு தேயவில்லை, தென்னாடு வஞ்சிக்கப்படவில்லை" என்று வடவர்களுக்கு வக்காலத்து வாங்கி பேசிடும் வெங்கட்ராமன் இதற்கு என்ன பதில் சொல்ல இருக்கிறார் !

ரயில்வே பாதைகள் அமைக்கப்படுமா ? படாதா ?

அணுசக்தி ஆராய்ச்சி நிலையம் இங்கே உண்டா – இல்லையா ?

உண்டு, அல்லது இல்லை என்று கூறுங்கள் ! உண்மை நிலையை மூடி மறைக்க வேண்டாம் !

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் என்னவாயிற்று ? உண்டா ? இல்லையா ?

சேது திட்டம் என்னவாயிற்று ? உண்டா ? இல்லையா?

மக்கள் கேட்கிறார்கள் ! இனியும் மூடி மறைத்துப் பயனில்லை ! உண்டு, அல்லது இல்லை என்று கூறி விடுங்கள் !

அமைச்சர் வெங்கட்ராமன் இதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார் ! மூடி மறைத்திடும் அரசியல் இனி நமக்கு வேண்டாம் ! உள்ள நிலையை மறைத்து மக்களுக்கு துரோகம் செய்ய வேண்டாம் ! இங்குள்ள அமைச்சர்கள் வெறும் சோளத் தக்கைகள் என்ற பெயரை எடுக்க வேண்டாம் !

வங்கத்தின் முதலமைச்சர் பி. சி. ராய் அவர்களைப் பார்த்தாவது இவர்கள் பாடம் கற்றுக் கொள்வார்கள் என்று எண்ணுகிறேன் !

சமீபத்தில் நடைபெற்ற வேதனைச் செய்தி ஒன்றை இங்கே கூற விரும்புகிறேன் !

அஸ்சாம் கலவரத்தில், நாற்பத்தி ஐயாயிரம் பேர்களுக்கு மேல் வங்கத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் அகதி

(அடுத்த பக்கம் பார்க்க)

இரவுராணி சிவஞானம் தரும் இன்பம் !

★

நண்பர் சிவஞானம், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தலில் ஆதரிப்பதாக சொல்லி, அதற்கு சில நிபந்தனைகளையும் போட்டிருக்கிறார் !

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாடு கொள்கையை விட்டு விட்டு அவரது கொள்கையை ஆதரித்தால் இவரும் தேர்தலில் சேர்ந்து பணி புரிவாராம் !

நண்பர், தினத்தந்திக்கு வாசகராய் இருப்பார்—எனவே அவருக்கு இரவு ராணி கதை தெரியுமென்று நினைக்கிறோம் !

சென்னை மாநகரத்தில் இருட்டு வேளையிலே, திருட்டுத்தனமாக நின்று கொண்டு, தன் வறுமையைப் போக்கிக் கொள்ள, தன் பசிக்கொடுமையைத் தீர்த்துக் கொள்ள—கண்ணைக் காட்டி, பவுடர் பூசிய முகத்தைக் காட்டி, பச்சைக் கலர் சேலையைக் காட்டி, பச்சை சிரிப்பைக் காட்டி, பக்குவமுள்ள வாலிபர்களை அழைத்து "பணம் கொடுங்கள், பருவ விருந்து அளிக்கிறேன்" என்று சொல்லுபவர்களுக்கு—தினத்தந்தி "இரவுராணி" என்று பெயர் வைத்திருக்கிறது !

செக்கச்சிவந்த மேனியும், சிரிப்புத் தவழும் முகமும், அன்பும், நல்லபண்பும் கொண்ட ஒரு எழிலரசியை மனைவியாகப் பெற்ற ஒரு வாலிபனைப் பார்த்து இரவு ராணி அழைத்தால் அவன் வருவானா? பச்சைக் கலர் சேலையும், பாக்குக் கலர் ஜாக் கெட்டும் அவனை மயக்க முடியுமா ?

"சபலம் தட்டினால்" என்று நன்பர் சிவஞானம் கேட்கக் கூடும் ! சபலம் தட்டாது–ஆண்மையைப் பழித்தால் போகக் கூடும்–ஆனால் கூப்பிடுவது பெண்ணாக இருக்கவும் வேண்டும்—அலியாக இருக்கக் கூடாது அல்லவா?

நண்பர் சிவஞானத்தை அலி என்று கூறவில்லை–ஆனால் அவரது அரசியலில் ஆண்மையில்லை என்பதை எவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் !

நீங்கள் தருகின்ற தேர்தல் இன்பம் எங்களுக்கு வேண்டாம் ! காஞ்சதுகளைப் பாருங்கள் சிக்கக் கூடும் !

பவுடர் கொஞ்சம் அதிகமாக இருக்கட்டும், சேலையும் கொஞ்சம் புதுசாக இருக்கட்டும், ஜாக்கெட்டும் வெல்வெட்டாகவே இருக்கட்டும் ! சிக்கியவன் காரியம் கைகூடாவிட்டாலும், உன் காரியமாவது கை கூடும் !

Registered as a Newspaper in CEYLON | வெளிநாடு 20 சதம்

Regd.No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு **Phone** 83285

(முன் பக்கத் தொடர்ச்சி)

களாகி வாழ முடியாமல் வங்கத்திற்குச் சென்றிருக்கின்றனர்! இதைக் கண்டு வங்கத்து அமைச்சர் பி. சி. ராய் நம்முடைய அமைச்சர்களைப் போல் வாய்ப்பொத்திக் கிடக்கவில்லை! சீறி எழுந்தார்! தன் மாநிலத்து மக்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமைகளைக் கண்டுகொதித்தெழுந்தார்! அவருடைய கோபக் கனல் யார் மீது திரும்பிற்று! நேரு சர்க்கார் மீது பாய்ந்தார்!

"அகில இந்தியா என்று பேசும் யோக்யர்களே! காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரையில் வாழும் நாற்பது கோடி மக்களும் இந்தியர்கள், ஒரே இனம், ஒரே நாட்டைச் சார்ந்தவர்கள் என்று கூறுகிறீர்களே! ஏன் அஸ்சாம் மாநிலததில் வங்கத்து மக்கள் வாழ முடியவில்லை! என்று சீறிப் பாய்ந்திருக்கிறார்!

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அகதிகள் போவது தான் வழக்கம்! கிழக்கிலிருந்து, மேற்கும் — மேற்கிலிருந்து கிழக்கும்தான் அகதிகள் செல்வார்கள்! ஆனால் இங்குள்ள விசித்திர நிலையை எங்குமே காண முடியாது!

ஒரே நாடு என்று சொல்லப்படும் ஒரு நாட்டில், ஒருமாநிலத்திலிருந்து ஒரு மாநிலத்திற்கு அகதிகளாகச் செல்லும் விசித்திரம் நிறைந்த வேடிக்கையை நாம் இங்குதான் காண முடிகிறது!

அதுமட்டுமல்ல வங்கத்து முதலமைச்சர் பி. சி. ராய் அவர்கள் "இன்ன தேதியில் ஹர்த்தால் நடத்தப்படும், வங்கத்து மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை கண்டிக்க கடையடைப்பு செய்யப்படும்" என்றும் கூறி இருக்கிறார்!

ஒரு நாட்டின் முதலமைச்சர் "ஹர்த்தால் செய்யுங்கள்" என்று கூறி இருக்கிறார்! அந்த மாநிலத்து முதலமைச்சர் யாருக்கு எதிராக ஹர்த்தால் நடத்தச் சொல்லுகிறார்! யாருக்குஎதிராகக் கடையடைப்புச் செய்யச் சொல்லுகிறார்! நேருவுக்கு எதிராக! முடிசூடா மன்னன் என்று போற்றப்படும் பண்டிதருக்கு எதிராக ஹர்த்தால் நடத்தச் சொல்லுகிறார்!

1947-ம் ஆண்டு வெள்ளைக்காரன் வெளியேறிய நாளை பெரியார் அவர்கள் துக்கநாள் என்று குறிப்பிட்டார்கள்! பெரியாருக்கு வாரிசு இன்று வங்கத்திலே கிடைத்திருக்கிறார்! வங்கத்து முதலமைச்சர் சுதந்திரத் தினத்தன்று துக்கத்தினம் கொண்டாடச் சொல்லி இருக்கிறார்! கறுப்புக் கொடிகளை உயர்த்தச் சொல்லி இருக்கிறார்

கவர்னர்தின விருந்து ரத்து செய்யப்பட்டது! "வங்காளத்து மக்கள் சுகபோகங்களை இழந்து துக்கக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறார்கள்! இந்த நேரத்தில் விருந்து எதற்கு?" என்று அந்த விருந்து ரத்து செய்யப்பட்டது!

சர்க்கார் வெளியிடும் கெஜட்டில் கறுப்புக் கோடுகள் காட்டி மத்திய சர்க்காருக்கு எதிராக துக்க தினச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்!

கோவிந்த வல்லப பந்த் மிரட்டினார்; டெலிபோன் மூலம் பயமுறுத்தினார்!

பண்டித ஜவகர்லால் நேரு வழக்கம்போல் இது சிறுபிள்ளைத்தனமானது என்று கூறினார்.

வங்கத்து மக்களுக்குஆகஸ்டு 15, விழா நாள் அல்ல; அது துக்க நாள் என்று மிகத் துணிச்சலோடு அந்த மாநிலத்து முதலமைச்சர் கூறினார்!

வங்கத்து மானம், மரியாதை தான் அவருக்கு முக்கியமாக இருந்தது! அவருக்குப் பெயரும் மந்திரிதான்-இங்கிருக்கும் பிறவிகளுக்கும் பெயர் மந்திரி தான்!

"மொழிப் பிரச்சினையை மறந்துவிடவேண்டும், மொழி மீது வெறி கூடாது" என்று மானம், மரியாதை கொஞ்சமும் இல்லாமல் இங்குள்ளவர்கள் பேசி வருகிறார்கள். மொழிப் பற்றும், இனப் பற்றும், நாட்டுப் பற்றும் கொஞ்சமும் இல்லாமல் வெறும் மனித சடலங்களாக வாழ்ந்து வருகிறார்கள்!

வங்கத்து முதலமைச்சர் பி.சி. ராய் அவர்களும் காங்கிரஸ்காரர்தான்—இங்குள்ள அமைச்சர்களும் காங்கிரஸ்காரர்கள் தான்! அவருக்கு இல்லாத ஏக இந்தியா பற்று, அவருக்கில்லா ஏக இந்தியா பாசம் இவர்களுக்கு மட்டும் எப்படிவந்தது? இவர்களை நம்பித்தான் நாம் இந்த நாட்டை ஒப்புவித்திருக்கிறோம், அதன் பலனை இந்த நாடு அனுபவித்தே தீர வேண்டும்.

நாமெல்லாம் விடுதலை வாரம் கொண்டாடி உணர்ச்சியும், எழுச்சியும் பெறுகின்ற இந்த நேரத்தில், நாம் ஒருசூளுரையை எடுத்துக் கொள்ள வேண்டும். மிக உறுதியோடு நாம் எடுத்துக் கொள்ளும் அந்த சூளுரையை நிறைவேற்றி வைக்கவேண்டும்!

அண்ணா அவர்கள் காலத்திலேயே தனித் திராவிடநாட்டை பெற்று, இந்த நாட்டு மக்களை வாழ்விக்க வேண்டும். நாம் கொண்டுள்ள இந்த உயிர் பிரச்சினையை நிறைவேற்றுவதற்கு ஆயிரக் கணக்கான வாலிபர்கள் இரத்தத்தைச் சிந்தவேண்டும்.

எந்த சூழ்நிலையாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் நம்முடைய நோக்கத்தைத் திருப்பாது, திராவிடநாடு விடுதலை பெற்று திராவிட சமுதாயத்தை வாழ்விக்க வேண்டும் என்று கூறி, நேரமும் முடிந்துகொண்டிருப்பதால் என் உரையையும் முடித்துக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறேன் ○

விடுதலை வார விழா

(5ம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப் பட்டிருந்த 'உதய சூரியன்' அணி செய்த பந்தலில் உயரமான மேடைமீது நிகழ்ச்சிகள் துவங்கின.

மாவட்டச் செயலாளர் தி.மணிவண்ணன் எம்.சி, அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தையும், திராவிட இயக்க வரலாற்றையும் விளக்கி சென்னை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் காஞ்சி மணிமொழியார், சட்டமன்ற உறுப்பினர்களான சத்தியவாணிமுத்து ஏ வி. பி. ஆசைத்தம்பி. ஏ. கோவிந்தசாமி ஆகியோர் முறையே பேசினர்.

இறுதியில் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள், தற்கால அரசியல் நிலையையும். ஆட்சியாளரின் போக்கையும் விளக்கி, திராவிட நாடு விடுதலை பெற' அனைவரும் சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இத்துடன், பொதுகூட்டம் இனிது முடிவுற்றது.

ஊர்வலத்தில் பல்வேறு சிறப்புக்களையும் சேர்த்து, வெற்றிகரமாக நடத்தித் தந்த சென்னையின் 10 தொருதி (பகுதி)க் கழகங்களையும்பாராட்டும் வகையில் ஒவ்வொரு பகுதி தி. மு. கழகத்திற்கும் ஒரு வெள்ளிக் கேடயத்தை மாவட்டக் கழகச் சார்பில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், அந்தந்தப் பகுதிச்செயலாளரிடம் வழங்கினர்.

அண்ணா அவர்களின் உருவச் சிலை அமைத்துத் தந்த சிற்பி வெங்கடேசன் அவர்களுக்கும் ஒரு கேடயம் அளிக்கப்பட்டது.

★

பாரதி விழா

(9ம் பக்கத் தொடர்ச்சி

போல் உலகெங்கிலும் இல்லை" என்று பாடியதற்கு மாறாக இந்திமொழி பெருமையை பேசி தமிழை அழிக்க பாடுபடும் சுயநலம் பிடித்தவர்களே! இனி எனக்கு விழா வேண்டாம்" என்றுதான் பாரதியாரின் படம் பேசும் சக்தியைப் பெற்றிருந்தால் பேசி இருக்கும்!

"வாழ்க பாரதி, ஒழிகபாரதியின் போலி பக்தர்கள்" என்று கூறி நாமும் பாரதியை போற்றுகிறோம், அவரது சுயநலமில்லாத தொண்டை பாராட்டுகிறோம்!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,:
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம் 1-35, வாணியர் தெரு. சென்னை-14.